DINAKARAN

PAGE NO: 14 Date: 10.11.2023

புதுவை பல்கலைக்கழகத்தில்

# பசுமை வளாக அலுவலகம் திறப்பு



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பசுமை வளாகத்தின் அலுவலகத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் திறந்து வைத்தார்.

புதுச்சேரி, நவ. 10: புதுச்சேரி பல்கலைக்கழகம் காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ளவும், வளாகத்தின் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் யுஜிசி தர ஆணைக்கு ஏற்ப வலுவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதில் முன்னாள் மாணவர்களுடன் கூட்டாக இணைந்து 'பசுமை வளாகத்தின் அலுவலகம்' நிறுவப்படுவதற்கு வழிவகுத்தது. இதில் நிலையான வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதை விரைவுபடுத்தவும், மாணவர்கள், அறிஞர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவும் பசுமை வளாகத்தின் அலுவலகத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் திறந்து வைத்தார்.

பேராசிரியர் தரணிக்கரசு, இயக்குநர் (ஆய்வுகள்) மற்றும் பேராசிரியர் ராஜீவ் ஜெயின், இயக்குநர் (கலாச்சாரம்) மற்றும் மூத்த பீடாதிபதிகள் பேராசிரியர் கிளமென்ட் சகாயரட்ஜா லூர்து மற்றும் பேராசிரியர் சந்திரிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை பதிவாளர் கிரிதரன், துணை பதிவாளர் சரவணன், கட்டடப் பொறியியல் துறைத்தலைவர் முருகவேலு, விஜிலென்ஸ் மற்றும் பாதுகாப்பு அலுவலர் முருகையன் உள்ளிட்ட பல்கலைக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும் பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் முனைவர் நந்திவர்மன், நோடல் அலுவலர்கள், துறை தலைவர்கள், பல்வேறு துறைகளை சேர்ந்த பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

DINAMALAR

PAGE NO: 09    DATE: 10.11.2023

தினமலர்
புதுச்சேரி | வெள்ளி | 10.11.2023

# பசுமை வளாக அலுவலகம் மத்திய பல்கலையில் திறப்பு

**புதுச்சேரி, நவ. 10–**

புதுச்சேரி பல்கலை.,யில் பசுமை வளாக அலுவலகத்தை துணை வேந்தர் குர்மீத் சிங் திறந்து வைத்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழகம் காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ளவும், வளாகத்தின் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், யூ.ஜி.சி., தர ஆணைக்கு ஏற்ப முன்னாள் மாணவர்களுடன் இணைந்து பசுமை வளாக அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி, திறந்து வைத்தார். பேராசிரியர்கள் தரணிக்கரசு, ராஜிவ் ஜெயின், கிளமெண்ட் சகாயராஜா லூர்து, சந்திரிகா முன்னிலை வகித்தனர். துணை பதிவாளர்கள் கிரிதரன், சரவணன், கட்டடப் பொறியியல் துறை தலைவர் முருகவேலு, விஜிலென்ஸ் மற்றும் பாதுகாப்பு அலுவலர் முருகையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் முனைவர் நந்திவர்மன் கூறுகையில், சுற்றுச்சூழல் உணர்வுள்ள நடத்தை மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை விரைவாக செயல்படுத்த, பசுமை வளாகத்தின் அலுவலகம் நான்கு முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும் என்றார்.

MAALAI MALAR

PAGE NO: 02

DATE: 10.11.2023

## புதுவை பல்கலைக்கழகத்தில் பசுமை வளாக அலுவலகம்

புதுச்சேரி, நவ.10—

புதுவை பல்கலைக் கழகத்தில் பசுமை வளாக அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தை துணைவேந்தர் குர்மீத்சிங் திறந்து வைத்தார். பேராசிரியர் தரணிக்கரசு, ராஜீவ்ஜெயின், கிளமெண்ட் சகாயராஜா லூர்து, சந்திரிகா முன்னிலை வகித்தனர். துணை பதிவாளர்கள் கிரிதரன், சரவணன், கட்டட பொறியியல் துறை தலைவர் முருகவேலு, விஜிலென்ஸ் பாதுகாப்பு அலுவலர் முருகையன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன் நன்றி கூறினார்.